# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.73/2025

### அ.சா. 1 (LW 1)

| பெயர் | திரு. ரவிசங்கர் | தொழில் | |
|---|---|---|---|
| த/ பெயர் | சீனிவாசன் | மதம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூகா | | தேதி | .2026 |

1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 முதல் 5 எதிரிகள் ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது உத்தமபாளையம் குடிமை பொருள் வழங்கல் குற்றபுலனாய்வு துறையில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 28.07.2023 அன்று காலை 06.30 மணிக்கு நான் திண்டுக்கல் நகர் தெற்கு காவல்நிலைய சார்பு ஆய்வாளராக பணியிலிருந்த போது என்னுடன் சிறப்பு சார்பு ஆய்வாளர் கோபால் , தலைமை காவலர் ராமச்சந்திரன், தலைமை காவலர் ஜெயந்திலால், மற்றும் முதுநிலை காவலர் ராம்பாபு , ஆகியோர்களுடன் திண்டுக்கல் நகர் தெற்கு காவல்நிலைய சரகத்திற்குட்பட்ட பகுதிகளில் ரோந்து செய்து வந்த போது எனது இரகசிய தகவலாளி போன் முலம் எனக்கு திண்டுக்கல் குடைப்பாறைப்பட்டிக்கு மேற்குபக்கம் உள்ள சுடுகாட்டில் 5 நபர்கள் கத்தி மற்றும் கட்டை போன்ற ஆயுதங்களுடன் கூட்டுக் கொள்ளை பற்றி பேசிக் கொண்டிருப்பதாக தகவல் சொல்ல நான் மற்றும் போலிஸ் பார்ட்டியுடன் சம்பவ இடம் சென்ற போது எங்களைப் பார்த்ததும் தப்பியோட முயன்றவர்களில் இருவரை மடக்கி பிடித்ததில் அவர்கள் முன்னுக்குப் பின் முரணாக பேசியும் பின்பு இறுதியில் 1 ம் எதிரி சாகுல் ஹமீது , த/பெ. முகமது முஸ்தபா, 2. தாஜூதின், த/பெ. சாகுல் ஹமீது, என்றும் தப்பி ஓடியவர்கள் பற்றி விசாரித்த போது 3 ம் நபர் 3) ரபீக்ராஜா, த/பெ. அப்துல் மாலிக், 4) சர்தார், த/பெ. ஹீராலால் , 5) முத்துவேல் ,த/பெ. நாகசாமி என்றும் தெரிவித்தனர். ஆயுதங்கள் பற்றி விசாரிக்க 1 ம் எதிரி சாகுல் அமீது, எங்கள் 5 பேருக்கும் கொலை வழக்கு மற்றும் பிற வழக்குகள் உள்ளது என்றும் வழக்கு செலவிற்காக 5 பேரும் திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலை பகுதிகளில் வருகின்ற வண்டிகளைப் பிடித்து கூட்டுக் கொள்ளை சம்பவம் செய்வதாக முயற்சி செய்வதாக தெரிவித்தவர்களை 06.45 மணிக்கு காரணம் கூறி கைது செய்தும், 1 வது எதிரி சாகுல் ஹமீதை விசாரித்த போது தனது தலைமையில்தான் இந்த கூட்டுக் கொள்ளை முயற்சி செய்ய இருந்ததாக தெரிவித்தவரை தனியாக பிரித்து யாருடைய

தூண்டுதலோ, வற்புறுத்தலோ இன்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை மடிக்கணிணியில் போலிசார் சாட்சிகள் முன்பு காலை 07.00 மணிக்கு பதிவு செய்தேன். எதிரி எடுத்து ஆஜர் செய்த 2 கத்திகள் மற்றும் 2 கட்டைகள், 2 நைலான் கயிறுகள் ஆகியவற்றை காலை 08.15 மணிக்கு அத்தாட்சியில் கைப்பற்றினேன். பின்பு காலை 09.30 மணிக்கு எதிரி மற்றும் சொத்துக்களுடன் நிலையம் வந்து திரேக பரிசோதனை செய்து எதிரிகளை பாராவசம் ஒப்புவித்து நிலைய குற்ற எண். 166/2023 இதச பிரிவுகள் 399, 402 இதசவாக வழக்கு பதிவு செய்து முதல்தகவல் அறிக்கையின் நகலை ஆய்வாளருக்கும் சம்மந்தப்பட்ட மேல் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். நான் பதிவு செய்த முதல்தகவல் அறிக்கை அது **அ..த.சா.ஆ.1.** ஆகும். நான் பதிவு செய்த ஒப்புதல் வாக்குமூலம் **அ.த.சா.ஆ.2.** ஆகும். அத்தாட்சி **அ.த.சா.ஆ.3.** ஆகும். சம்பவத்தன்று நான் கைப்பற்றிய ஆயுதங்கள் இன்று நீதிமன்றத்திதல் உள்ளது. அந்த 2 கத்திகள் **சா.பொ.1**. ஆகும். ( எண்ணிக்கை – 2) 2 கட்டைகள் **சா.பொ.2.** ஆகும்.( எண்ணிக்கை–2) 2 நைலான் கயிறுகள் **சா.பொ.3**.ஆகும். ( எண்ணிக்கை–2) . எதிரிகள் ஆஜர் இல்லை. அதனால் அடையாளம் காட்ட முடியவில்லை. அவர்களைப் பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>1,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

எனக்கு இரகசிய தகவலாளி போன் மூலமாக சொன்னதாக முதல் தகவல் அறிக்கையிலும், ஆய்வாளர் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எத்தனை மணிக்கு தகவல் கிடைத்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகள் குடைப்பாறைப்பட்டியில் சுடுகாட்டில் எந்த இடத்தில் என்று குறிப்பாக எதிரிகள் இருந்தார்கள் என்று ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் குறிப்பாக சொல்லவில்லை. சுடுகாடு என்று சொல்லியுள்ளோம். 1ம் எதிரியிடமிருந்து பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம் என்னால் மடிக்கணிணியில் தட்டச்சு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. நான் தான் தட்டச்சு செய்தேன். 1ம் எதிரி கொடுத்ததாக சொல்லும் ஒப்புதல் வாக்குமூலத்தை எங்கு வைத்து பிரிண்ட் செய்யப்பட்டது என்ற விவரத்தை முதல் தகவல் அறிக்கையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அத்தாட்சியில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் சான்று பொருட்களான கத்தி, நைலான் கயிறு , கட்டைகள் ஆகியவை பொதுவாக கடையில் கிடைக்க கூடியது என்றால் சரிதான். அத்தாட்சியில் குற்ற எண், சட்ட பிரிவு பற்றி குறிப்பாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அத்தாட்சியில் கைப்பற்றியதாக சொல்லப்படும் சான்று பொருட்களை சான்று பெட்டியில் வைத்து என்னால் சீல் செய்யப்பட்டதாக சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கின் சம்பவ இடத்தின் அருகே கோவில் உள்ளது , மேலும் முத்தழகுபட்டி , பெரியபள்ளபட்டி செல்லும் சாலை உள்ளது, மற்றும் பொது மக்கள் குடியிருப்பு உள்ளது என்றால் கோவில் சுமார் 300 மீட்டர் தூரத்தில் உள்ளது. பொது மக்கள் குடியிருப்பு சுமார் 200 மீட்டர் தூரத்தில் உள்ளது. வழக்கின் சம்பவத்தை நேரில் பார்த்ததாகவோ அல்லது கேள்விப்பட்டதாகவோ, பொது மக்கள் யாரையும் நான் விசாரித்ததாகவோ முதல் தகவல் அறிக்கையிலும், ஆய்வாளர் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ தேதியில் என்னுடன் ரோந்து பணியில் இருந்த காவலர்கள் கோபால், இராமச்சந்திரன், ராம்பாபு, ஜெயந்திலால் ஆகியோர் என்னுடன் பணிபுரிந்த போலிசார்தான். முதல் தகவல் அறிக்கை காலம் 14 ல் நான் கையெழுத்து

செய்யவில்லை என்றால் சரிதான். பார்வைமகஜர், வரைபடம் என்னால் தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் சம்பவ இடத்தில் எதிரிகள் இல்லை என்றாலும் , எதிரிகளை சொன்ன தேதியில், சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில்கைது செய்யவில்லை என்றாலும் வழக்கின் ஆவணங்கள், சான்று பொருட்கள் காவல்நிலையத்தில்ள வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகள் மீது பொய்யாக இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

<u>3 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

3 வது எதிரி சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் இருந்தார்கள். எனக்கு இரகசிய தகவல் கொடுத்தவர் யார் என்று விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் 28.07.2023 அன்று Special team ல் இருந்தேனா என்றால் இல்லை. இரவு ரோந்து பணியில் இருந்தேனா என்றால் இல்லை. நான் காவல்நிலையத்தில் இருந்தேன். மேற்படி எதிரிகளை அனைவரையும் எனக்கு முன்பே தெரியும். எதிரிகளுக்கு எங்கள் காவல் நிலையத்தின் எந்த வழக்கிலும் தண்டனை எதுவும் பெற்று கொடுக்கவில்லை என்றால் சரிதான். காவல்நிலையத்திற்கு ஏதேனும் தகவல் வந்தால் அதை பொது நாட்குறிப்பில் பதிய வேண்டும் என்றால் ரோந்து செல்வதாக குறிப்பு செய்தேன். அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் சம்பவ இடத்திற்கு எந்த வாகனத்தில் சென்றேன் என்று போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல போலிஸ் ஜீப்பில் சென்றதாக சொல்லியுள்ளேன். என்னுடன் சம்பவத்தன்று ரோந்து பணிக்கு பணிக்கு வந்த ஏனைய காவலர்கள் என்னுடன் பணி செய்பவர்கள்தான். எனக்கு வந்த இரகசிய தகவல் செல்போன் மூலமாக வந்தது. அந்த செல்போன் எண்ணை பற்றி விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த தகவலாளியை சாட்சியாக வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். பொதுவாக எங்கள் காவல்நிலையத்தில் அந்த சுடுகாட்டில்தான் எதிரிகளை பிடித்ததாக வழக்கமாக பதியப்படும் என்றால் அவ்வாறு இல்லை. உண்மையில் அவ்வாறு பல வழக்குகள் உள்ளது என்றால் சரியல்ல. அந்த சுடுகாடு 2 ஏக்கர் இருக்குமா என்றால் 1/2 ஏக்கர் இருக்கும். சுடுகாட்டிற்கு வாசலில் கேட் மற்றும் வாட்ச்மேன் உள்ளனரா என்றால் இல்லை. சுடுகாட்டின் வரைபடத்தை வழக்கில் போடவில்லை என்றால் சரிதான். எனது விசாரணையில் எத்தனை மணிக்கு இரகசிய தகவல் வந்தது என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு காலை 06.00 மணிக்கு சென்றேன். 3 வது எதிரி உண்மையில் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும் வழக்கில் தேவையில்லாமல் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. சட்ட பிரிவு 399 என்பது 5 நபர்கள் இருந்தால்தான் வனைய முடியும் என்பதால்தான் மேற்படி வழக்கில் 3 வது எதிரி சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல. அனுமானத்தின் பேரில் தொடரப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியிலோ அதற்கு முந்தைய நாளும் பொதுமக்களிடம் எந்த புகாரும் நான் சொல்லியவாறு காவல்நிலையத்திற்கு வரவில்லை என்றால் சரிதான். நான் ஏற்கனவே ஒரு வழக்கை தயார் செய்து கொண்டு பின்னிட்டு குற்றவாளியை முடிவு செய்தேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு நான் சென்றதாக சொல்லும் நேரம் போன்றவை வழக்கிற்கு சாதகமாக சொல்லப்பட்டது என்றால்சரியல்ல. உண்மையில் அவ்வாறு சம்பவம் நடைபெற்றிருந்தால் பொதுமக்கள் சாட்சியம் சொல்லியிருப்பார்கள் என்றாலும்

அவ்வாறு இல்லாத பட்சத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. குற்ற பின்னனி மற்றும் குறியீடுக்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றாலும் வழக்கிற்கும் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**4,5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை- எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகியிருந்தும் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.**

**மறு விசாரணை - இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.03.06 21:47:58 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.